கலை பண்பாட்டுத்துறை

# செய்திக்குறிப்பு

2023–2024 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் போது, நாடடுப்புறக் கலைகளைப் பாதுகாக்கவும், இப்பண்பாடு தொடர்ந்து வருங்காலங்களிலும் செழித்தோங்கவும், மாநிலம் முழுவதும் 25 இடங்களில் பகுதிநேர நாட்டுப்புறக் கலைப்பயிற்சி மையங்கள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், அரசாணை(நிலை) எண்.330, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள்.8.9.2023 வாயிலாக ஆணை வெளியிடப்பட்டது.

அரசாணையின் அடிப்படையில், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு அரசு இசைக்கல்லூரிகளிலும், சென்னை, கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகளிலும், மாமல்லபுரம் அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியிலும், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சேலம், கிருஷ்ணகிரி, விழுப்புரம், கடலூர், சீர்காழி, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, பெரம்பலூர், கரூர், இராமநாதபுரம், சிவகங்கை, ஈரோடு, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் செயல்படும் மாவட்ட அரசு இசைப்பள்ளிகளிலும் மற்றும் தஞ்சாவூர் மண்டல கலை பண்பாட்டு மையம் ஆகிய 25 இடங்களிலும் பகுதிநேர நாட்டுப்புறக் கலைப்பயிற்சி மையங்கள் தோற்றுவிக்கப்பட்டு, ஒவ்வொரு இடத்திலும் நான்கு வகையான நாட்டுப்புறக் கலைகளில் ஓராண்டு சான்றிதழ் பயிற்சியாக வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை நடத்தப்படவுள்ளது.

25 நாட்டுப்புறக் கலைப்பயிற்சி மையங்களிலும், ஒரு மையத்தில் நான்கு பகுதி நேர நாட்டுப்புறக் கலைப் பயிற்றுநர்கள் என 100 பணியிடங்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.7,000/–மதிப்பூதியத்தில் நிரப்பப்படவுள்ளன. தகுதியும், திறமையும் 25 ஆண்டுகள் பணி அனுபவம் கொண்ட நாட்டுப்புறக் கலைஞர்கள் அல்லது தகுதியும் திறமையும் கொண்ட 50 வயதிற்கு மேற்பட்ட நாட்டுப்புறக் கலைஞர்கள் இப்பணியிடத்திற்கு 5.1.2024–க்குள் விண்ணப்பித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பணியிடங்கள் குறித்த விவரங்கள், விண்ணப்பிக்க வேண்டிய முகவரி, விண்ணப்பம் ஆகியவற்றை கலை பண்பாட்டுத்துறையின் இணையதளத்தில் (www.artandculture.tn.gov.in) இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பங்களின் அடிப்படையில், துறையால் அமைக்கப்படும் தேர்வுக்குழுவால் தகுதி வாய்ந்த கலைஞர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

இயக்குநர்

## பகுதி நேர நாட்டுப்புறக் கலைப் பயிற்றுநர் / மேற்பார்வையாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

| வ. எண் | பயிற்சி மையம் | பயிற்றுவிக்கப்படும் கலைகள் | பயிற்றுநர் பணியிடங்களின் எண்ணிக்கை | மேற்பார்வையாளர் பணியிடங்கள் | விண்ணப்பிக்க வேண்டிய முகவரி |
|---|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, சென்னை | தப்பாட்டம்(1), நையாண்டி மேளம்(1), நாடகம் (1), கானா பாட்டு(1), | 4 | | உதவி இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையம் சதாவரம், கோட்டை காவல் (கிராமம்), சின்ன காஞ்சிபுரம், ஓரிக்கை (அஞ்சல்), காஞ்சிபுரம் – 631502. தொலைபேசி : 044 – 27269148. மின் அஞ்சல் : adartskpm@gmail.com |
| 2 | அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை | தப்பாட்டம்(1), ஒயிலாட்டம்(1), சிலம்பாட்டம்(1),, புரவியாட்டம்(1) | 4 | | |
| 3 | அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, மாமல்லபுரம் | சிலம்பாட்டம்((1), ஒயிலாட்டம்(1), தப்பாட்டம்(1), தெருக்கூத்து(1) | 4 | | |
| 4 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, காஞ்சிபுரம் | கட்டைக்கூத்து (1), கைச்சிலம்பாட்டம்(1), புலியாட்டம்(1), தப்பாட்டம்(1) | 4 | | |
| 5 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, திருவண்ணாமலை | கட்டைக்கூத்து(1), பெரிய மேளம்(1), கரகாட்டம்(1), பம்பை மேளம் (1) | 4 | | |
| 6 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, சேலம் | சிலம்பாட்டம்(1), தப்பாட்டம்(1), கோல்கால் ஆட்டம்(1), பொம்மலாட்டம்(1) | 4 | | உதவி இயக்குநர் மண்டலக் கலை பண்பாட்டு மையம், தளவாய்பட்டி–திருப்பதி கவுண்டனூர் சாலை, அய்யம்பெருமாம்பட்டி (அஞ்சல்), சேலம் – 636302. தொலைபேசி : 0427 – 2386197, மின் அஞ்சல் : adarts.tnslm@gmail.com |
| 7 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, கிருஷ்ணகிரி | நாடகம்(1), பம்பையாட்டம்(1), கைச்சிலம்பாட்டம்(1), சேவையாட்டம் (1) | 4 | | |
| 8 | மண்டல கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | கரகாட்டம்(1), பொய்க்கால் குதிரை(1), காவடியாட்டம்(1), நையாண்டி மேளம் – நாதஸ்வரம் (1) | 4 | | உதவி இயக்குநர் மண்டலக் கலை பண்பாட்டு மையம், மண்டல கயிறு வாரியம் அலுவலகம் அருகில், வல்லம் சாலை, பிள்ளையார்பட்டி அஞ்சல், தஞ்சாவூர் – 613403, தொலைபேசி : 04362 – 232252, மின் அஞ்சல்: radactnj11@gmail.com |
| 9 | தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, திருவையாறு | பின்னல் கோலாட்டம்(1), காவடியாட்டம்(1), தப்பாட்டம்(1), இசை நாடகம்(1) | 4 | | |
| 10 | அரசு கவின் கலைக் கல்லூரி, கும்பகோணம் | கரகாட்டம்(1), தப்பாட்டம்(1), பொம்மலாட்டம்(1), சிலம்பாட்டம்(1) | | | |
| 11 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, விழுப்புரம் | தெருக்கூத்து(1), காவடியாட்டம்(1), தப்பாட்டம்(1), சிலம்பாட்டம்(1) | 4 | 1 | |
| 12 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, கடலூர் | கரகாட்டம்(1), வில்லுப்பாட்டு(1), தெருக்கூத்து(1), நையாண்டி மேளம்– தவில் (1) | 4 | 1 | |
| 13 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, திருவாரூர் | கரகாட்டம்(1), மயிலாட்டம்(1), காவடியாட்டம்(1), புலியாட்டம் (1) | 4 | | |
| 14 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, | பொம்மலாட்டம்(1), சாமியாட்டம்(1), | 4 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சீர்காழி | நையாண்டி மேளம்(1), தப்பாட்டம்(1) | | | |
| 15 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, பெரம்பலூர் | கரகாட்டம், தப்பாட்டம், கோலாட்டம், சிலம்பாட்டம் | 4 | | உதவி இயக்குநர் மண்டலக் கலை பண்பாட்டு மையம், எண் 32, நைட்சாயில் டெப்போ சாலை, மூலத்தோப்பு, மேலூர் ரோடு, ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி – 620006. தொலைபேசி :0431 – 2434122, மின் அஞ்சல் : artandculturetryrgn2014@gmail.com |
| 16 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, கரூர் | தேவராட்டம், இசை நாடகம், ஒயிலாட்டம், தப்பாட்டம் | 4 | | |
| 17 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, புதுக்கோட்டை | நாடகம், தப்பாட்டம், கிராமியப் பாட்டு, கரகாட்டம் | 4 | | |
| 18 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, திருச்சிராப்பள்ளி | நாடகம், கரகாட்டம், பின்னல் கோலாட்டம், சக்கையாட்டம், சாட்டைகுச்சியாட்டம் | 4 | 1 | |
| 19 | தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, மதுரை | தப்பாட்டம், மரக்காலாட்டம், இசை நாடகம், கரகாட்டம் | 4 | | உதவி இயக்குநர் மண்டலக் கலை பண்பாட்டு மையம், பாரதி உலா முதல் தெரு, தல்லாகுளம், மதுரை – 625002, தொலைபேசி : 0452 – 2566420, மின் அஞ்சல் : artadmdu@gmail.com |
| 20 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, இராமநாதபுரம் | தப்பாட்டம், கரகாட்டம், ஒயிலாட்டம், சிலம்பாட்டம் | 4 | 1 | |
| 21 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, சிவகங்கை | ஒயிலாட்டம், தெம்மாங்கு பாட்டு, தப்பாட்டம், நாடகம் | 4 | | |
| 22 | மாவட்ட அரசு இசைப்பள்ளி திருநெல்வேலி | கரகாட்டம், கணியன்கூத்து, நாட்டுப்புறப் பாட்டு, நையாண்டி மேளம் | 4 | | உதவி இயக்குநர் மண்டலக் கலை பண்பாட்டு மையம், 870/21 அரசு அலுவலர் ஆ குடியிருப்பு, திருநெல்வேலி – 627007. தொலைபேசி : 0462 – 2553890, மின் அஞ்சல் : racctnu@gmail.com |
| 23 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, தூத்துக்குடி | ஒயிலாட்டம், தேவராட்டம், கழியல் ஆட்டம், வில்லுப்பாட்டு | 4 | | |
| 24 | தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, கோயம்புத்தூர் | துடும்பாட்டம், ஜிக்காட்டம், காவடியாட்டம், வள்ளி கும்மி | 4 | | உதவி இயக்குநர் மண்டலக் கலை பண்பாட்டு மையம், தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி வளாகம், செட்டிபாளையம் பிரிவு ரோடு, மலுமிச்சம்பட்டி அஞ்சல், கோயம்புத்தூர் – 640150, தொலைபேசி : 0422 – 2610290, மின் அஞ்சல் : adarts.tncbe@gmail.com. |
| 25 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, ஈரோடு | தப்பாட்டம், சிலம்பாட்டம், தெருக்கூத்து, கும்மி, கோலாட்டம் | 4 | | |
| மொத்தம் | | | 100 | 4 | |

கலை பண்பாட்டுத்துறை

**பகுதிநேர நாட்டுப்புறக் கலைப்பயிற்றுநர் பணிக்கான விண்ணப்பம்**
**Application for Part time Folk Arts Teachers**

.

நிழற்படம்

Passport size Photo

| | | | |
|---|---|---|---|
| 1 | விண்ணப்பதாரரின் பெயர்<br>தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்<br>(Name of the Applicant (Block Letters) ) | : | |
| 2 | (அ) ஆண் / பெண் / மூன்றாம் பாலினம் விவரம் ( Sex) | : | |
| 2 | தகப்பனார் / கணவர் / பாதுகாவலர் பெயர்<br>(Name of the Father / Husband / Guardian) | : | |
| 3 | பிறந்த தேதி மற்றும் வயது ஆதாரத்துடன்<br>(Age and Date of Birth with Proof) | : | |
| 4 | சாதி சான்று நகல் | : | |
| 5 | விண்ணப்பதாரரின் பொதுக் கல்வித் தகுதி<br>(General Educational Qualification) | : | |
| 6 | விண்ணப்பதாரர் நாட்டுப்புறக் கலையில் தகுதி இருப்பின் அதன் விவரம்<br>(Qualification in Folk Arts if any) | : | |
| 7 | (அ) தாய்மொழி , எழுத பேச மற்றும் படிக்கத் தெரிந்த மொழி ( Mother Tongue, Language know to read, write and speak) | : | |
| 8 | பயிற்றுநர் பணிக்கு விண்ணப்பிக்கும் பாடப்பிரிவு (Application for applying the instructor post specified ) | : | |
| 9 | பணி அனுபவம் (ஆண்டுகள்)(Experience)<br>1. ஆசிரியர் பணி அனுபவம்<br>2. கலைஞராக பணி அனுபவம்<br>3. நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக பணி அனுபவம் | : | |

| | | | |
|---|---|---|---|
| 10 | பணி அனுபவத்திற்கான சான்றிதழ்கள் | : | |
| 11 | மாவட்ட / மாநில / தேசிய விருதுகள் பெற்றுள்ள விவரம் | : | |
| 12 | தற்போது வசிக்கும் முகவரி<br>Present residential address | : | |
| 13 | நிலையான முகவரி / கைப்பேசி எண் / மின்னஞ்சல் முகவரி<br>Present Address / Cell No / E-mail ID | : | |

## உறுதிமொழி (DECLARATION)

நான் மேற்கூறிய விவரங்கள் உண்மையானவை எனவும் மற்றும் பகுதிநேர நாட்டுப்புறக் கலைப்பயிற்சி மையத்தின் விதிமுறைகளுக்கும், நிர்வாகத்தின் உத்தரவுக்கும், நிர்வாகம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கும் முழுமையாக கட்டுப்பட்டு நடப்பேன் என்று இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

(I declare that all the particulars furnished above are true and correct and I will abide by the rules and regulations prescribed by the Part time Folk Art Training Centre from time to time and the decisions taken by the administration)

| | | |
|---|---|---|
| இடம் :<br>Place :<br>நாள்<br>Date : | விண்ணப்பதாரரின் கையொப்பம் | பெற்றோர் /கணவர் / பாதுகாவலர் கையொப்பம் |

குறிப்பு :

1. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் 5.1.2024–க்குள் அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும்.
2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் ரூ.10க்கான அஞ்சல் வில்லை ஒட்டிய, முழு முகவரியுடன் கூடிய தபால் கவர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
3. கல்வி மற்றும் இசையில் பெற்ற தேர்ச்சி / ஆண்டு வருமானம் / வயது மற்றும் சாதி / பணி அனுபவம் சம்மந்தமானவைகளுக்கு உரிய சான்றிதழ்களின் நகல்கள் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.